# இன்றைய இறைவார்த்தை

# 11-07-2015

**ஆண்டின் பொதுக்காலம் 14ஆம் வாரம் – சனி**
**முதல் ஆண்டு**

## முதல் வாசகம்:

கடவுள் உங்களைக் கனிவுடன் சந்திக்க உறுதியாக வருவார்.
இந்த நாட்டிலிருந்து அவர் உங்களை அழைத்துச் செல்வார்.

**தொடக்க நூலிலிருந்து வாசகம். 49 : 29 – 32, 50 : 15 – 26**

அந்நாள்களில் யாக்கோபு தம் புதல்வர்களுக்குக் கட்டளையிட்டுக் கூறியது: "இதோ நான் என் இனத்தவரோடு சேர்க்கப்பட இருக்கிறேன். என்னை என் தந்தையருடன் இத்தியனான எப்ரோனின் நிலத்திலுள்ள குகையில் அடக்கம் செய்யுங்கள். அது கானான் நாட்டில் மம்ரே பகுதிக்கு அருகேயுள்ள மக்பேலாவின் நிலத்தில் அமைந்துள்ளது. ஆபிரகாம் இத்தியனான எப்ரோனிடமிருந்து அந்த நிலத்தை கல்லறை நிலத்திற்கென விலைக்கு வாங்கினார். அங்கே ஆபிரகாமையும் அவர் மனைவி சாராவையும் அடக்கம் செய்தனர். அங்கு ஈசாக்கையும் அவர் மனைவி ரெபேக்காவையும் அடக்கம் செய்தனர். அங்கே தான் நானும் லேயாவை அடக்கம் செய்துள்ளேன். அந்நிலமும் அக்கல்லறையும் இத்தியரிடமிருந்து விலைக்கு வாங்கப்பெற்றவை." யாக்கோபு தம் புதல்வர்களுக்குக் கட்டளைகளை வழங்கி முடித்தபின், தம் கால்களைப் படுக்கையினுள் மடக்கிக் கொண்டு உயிர் நீத்து, தம் இனத்தாருடன் சேர்த்துக்கொள்ளப்பட்டார். அப்பொழுது, யோசேப்பின் சகோதரர் தங்கள் தந்தை இறந்துவிட்டதைக் கண்டு, "யோசேப்பு நாம் அவருக்குச் செய்த அனைத்துத் தீமைகளையும் கருதி, இப்பொழுது நம்மை வெறுத்து உறுதியாகப் பழிவாங்குவார்" என்று எண்ணினர். எனவே அவர்கள் யோசேப்புக்கு இவ்வாறு செய்தி அனுப்பினர்: "உம் தந்தை இறப்பதற்கு முன், "உன் சகோதரர் உனக்குத் தீங்கிழைத்ததன் மூலம் உண்டான குற்றப் பழியையும், பாவத்தையும் மன்னித்து விடு என்று யோசேப்புக்குச் சொல்லுங்கள்" என்று எங்களுக்குக் கட்டளையிட்டார். ஆகவே, இப்பொழுது உம் தந்தையின் கடவுளுடைய அடியார்களாகிய எங்களின் குற்றப்பழியை மன்னித்தருளும்." அவர்கள் இதைத் தம்மிடம் அறிவித்தபோது யோசேப்பு அழுதார். அவர் சகோதரரும் அழுது அவர்முன் தாள் பணிந்து, "நாங்கள் உம் அடிமைகள்" என்றனர். யோசேப்பு அவர்களிடம், "அஞ்சாதீர்கள். நான் கடவுளுக்கு இணையானவனா? நீங்கள் எனக்குத் தீமை செய்ய நினைத்தீர்கள். ஆனால் கடவுள் அதை இன்று நடப்பதுபோல், திரளான மக்களை உயிரோடு காக்கும் பொருட்டு நன்மையாக மாற்றிவிட்டார். ஆகவே இப்பொழுது அஞ்சவேண்டாம். உங்களையும் உங்கள் குழந்தைகளையும் நான் பேணிக் காப்பேன்" என்றார். இப்படியாக அவர் அவர்களுக்கு ஆறுதல் அளித்தார். அவர்களுடன் இதமாகப் பேசிவந்தார். யோசேப்பும் அவர் தந்தையின் வீட்டாரும் எகிப்தில் குடியிருந்தனர். யோசேப்பு நூற்றுப் பத்து ஆண்டுகள் உயிர் வாழ்ந்தார். எப்ராயிமின் மூன்றாம் தலைமுறையைப் பார்க்கும் வரையிலும் மனாசேயின் மகன் மாக்கிரின் குழந்தைகள் தம் மடியில்

விளையாடும் வரையிலும் யோசேப்பு உயிர் வாழ்ந்தார். யோசேப்பு தம் சகோதரரிடம், “நான் சாகும் வேளை வந்துவிட்டது. ஆனால் கடவுள் உங்களைக் கனிவுடன் சந்திக்க உறுதியாக வருவார். ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபுக்குத் தாம் கொடுப்பதாக வாக்களித்த நாட்டிற்கு இந்த நாட்டிலிருந்து அவர் உங்களை அழைத்துச் செல்வார்” என்றார். மீண்டும் யோசேப்பு, “கடவுள் உங்களைக் கனிவுடன் சந்திக்க உறுதியாக வருவார். அப்பொழுது நீங்கள் என் எலும்புகளை இங்கிருந்து எடுத்துச் செல்லுங்கள்” என்று சொல்லி, இஸ்ரயேல் புதல்வரிடமிருந்து உறுதிமொழி பெற்றுக்கொண்டார். யோசேப்பு தம் நூற்றுப்பத்தாம் வயதில் இறந்தார்.

**ஆண்டவர் வழங்கும் அருள்வாக்கு.**
**இறைவா! உமக்கு நன்றி.**

**பதிலுரைப்பாடல்:**
**திருப்பாடல்கள்: 105 : 1 – 2, 3 – 4, 6 – 7 (69:32)**
**பல்லவி: கடவுளை நாடித் தேடுவோரே, உங்கள் உள்ளம் ஊக்கமடைவதாக.**

1. ஆண்டவருக்கு நன்றி செலுத்துங்கள்! அவர்தம் பெயரைச் சொல்லி வழிபடுங்கள்! அவர்தம் செயல்களை மக்களினங்கள் அறியச் செய்யுங்கள். அவருக்குப் பாடல் பாடுங்கள். அவரைப் புகழ்ந்தேத்துங்கள்! அவர்தம் வியத்தகு செயல்கள் அனைத்தையும் எடுத்துரையுங்கள்! பல்லவி

2. அவர்தம் திருப்பெயரை மாட்சிப்படுத்துங்கள். ஆண்டவரைத் தேடுவோரின் இதயம் அக்களிப்பதாக! ஆண்டவரையும் அவரது ஆற்றலையும் தேடுங்கள்! அவரது திருமுகத்தை இடையறாது நாடுங்கள்! பல்லவி

3. அவரின் ஊழியராம் ஆபிரகாமின் வழிமரபே! அவர் தேர்ந்துகொண்ட யாக்கோபின் பிள்ளைகளே! அவரே நம் கடவுளாகிய ஆண்டவர்! அவரின் நீதித் தீர்ப்புகள் உலகம் அனைத்திற்கும் உரியன. பல்லவி

**நற்செய்திக்கு முன் வாழ்த்தொலி: (1 பேதுரு 4:14)**
அல்லேலூயா, அல்லேலூயா!
கிறிஸ்துவின் பொருட்டுப் பிறர் உங்கள்மீது வசை கூறும்போது நீங்கள் பேறுபெற்றவர்கள். ஏனெனில், கடவுளின் மாட்சிமிக்க தூய ஆவி உங்கள்மேல் தங்கும்.
அல்லேலூயா.

# இன்றைய இறைவார்த்தை

# 11-07-2015

**நற்செய்தி வாசகம்:**

உடலை மட்டும் கொல்பவர்களுக்கு அஞ்ச வேண்டாம்.

✠ தூய மத்தேயு எழுதிய நற்செய்தியிலிருந்து வாசகம். **10 : 24 – 33**

அக்காலத்தில் இயேசு தம் சீடர்களை நோக்கிக் கூறியது: “சீடர் குருவை விடப் பெரியவர் அல்ல. பணியாளரும் தம் தலைவரை விடப் பெரியவர் அல்ல. சீடர் தம் குருவைப் போல் ஆகட்டும். பணியாளர் தம் தலைவரைப் போல் ஆகட்டும். அதுவே போதும். வீட்டுத் தலைவரையே பெயல்செபூல் என அழைப்பவர்கள் வீட்டாரைப் பற்றி இன்னும் தரக் குறைவாகப் பேச மாட்டார்களா? எனவே, அவர்களுக்கு அஞ்சவேண்டாம். ஏனெனில் வெளிப்படாதவாறு மூடப்பட்டிருப்பது ஒன்றும் இல்லை. அறியமுடியாதவாறு மறைந்திருப்பதும் ஒன்றும் இல்லை. நான் உங்களுக்கு இருளில் சொல்வதை நீங்கள் ஒளியில் கூறுங்கள். காதோடு காதாய்க் கேட்பதை வீட்டின் மேல் தளத்திலிருந்து அறிவியுங்கள். ஆன்மாவைக் கொல்ல இயலாமல், உடலை மட்டும் கொல்பவர்களுக்கு அஞ்ச வேண்டாம். ஆன்மாவையும் உடலையும் நரகத்தில் அழிக்க வல்லவருக்கே அஞ்சுங்கள். காசுக்கு இரண்டு சிட்டுக் குருவிகள் விற்பதில்லையா? எனினும் அவற்றுள் ஒன்றுகூட உங்கள் தந்தையின் விருப்பமின்றித் தரையில் விழாது. உங்கள் தலைமுடியெல்லாம் எண்ணப்பட்டிருக்கின்றது. சிட்டுக் குருவிகள் பலவற்றைவிட நீங்கள் மேலானவர்கள். எனவே அஞ்சாதிருங்கள். மக்கள் முன்னிலையில் என்னை ஏற்றுக்கொள்பவரை விண்ணுலகில் இருக்கும் என் தந்தையின் முன்னிலையில் நானும் ஏற்றுக்கொள்வேன். மக்கள் முன்னிலையில் என்னை மறுதலிப்பவர் எவரையும் விண்ணுலகில் இருக்கிற என் தந்தையின் முன்னிலையில் நானும் மறுதலிப்பேன்.”

**கிறிஸ்து வழங்கும் நற்செய்தி.**
**கிறிஸ்துவே! உமக்குப் புகழ்.**

**சிந்தனைக்கு:**

இறைமகன் இயேசு கடவுளின் பராமரிப்பு பற்றி இன்றய நற்செய்தியில் கூறுகிறார். பறவை இனத்தில் மிகவும் சிறியது சிட்டுக்குருவி. இந்த சிட்டுக்குருவிகள் எப்பொழுதும் உற்சாகத்துடனும் மகிழ்சியுடனும் இருப்பதைக் காணலாம். அவைகள் எதைப் பற்றியும் கவலைப்படுவதாகத் தெரியவில்லை. இந்த சிட்டுக் குருவிகள் மிக மலிந்த விலையில் 1 காசுக்கு இரண்டு (2000 ஆண்டுகளுக்கு முன்) சிட்டுக் குருவிகள் கிடைத்திருக்கின்றன. இவ்வளவு மலிந்த, உருவத்தில் மிகச் சிறிய சிட்டுக்குருவிகளையே கடவுள் இவ்வாராகப் பராமரித்து வருகின்றார். ஆகவே கடவுளின் சாயலகப் படைக்கப்பட்ட நம்மைக் கடவுள் எவ்வளவாய் பராமரிக்கமாட்டார்!

இவ்வுலகில் மாய்ந்து மாய்ந்து பொருள் தேடுவோர் ஏராளம். இவ்வுலகச் செல்வத்தைச் சேர்க்க எத்தகைய வழியையும் பின்பற்றி எப்படியும் வாழலாம் என்று மனம் போன போக்கில் முற்படுகின்றனர். இவர்கள் கடவுளின் அன்பையும் பராமரிப்பையும் கண்டுணராதவர்கள். “அஞ்சாதீர்கள்” என்ற அறைகூவல் நமக்கு கடவுளின் பராமரிப்பையும், அன்பையும் உணர்த்துவதோடு மட்டுமல்லாமல் நேரிய வழியில் வாழ உற்சாகத்தைக் கொடுக்கின்றது. “ஆன்மாவையும் உடலையும் நரகத்தில் அழிக்க வல்லவருக்கே அஞ்சுங்கள்” என்ற இறைவாக்கிற்கேற்ப எந்த சூழ்நிலையிலும் தீய வழியை நாடாமல் கடவுள் காட்டிய நேரிய வழியிலும், உண்மையின் வழியிலும் வாழவும், நற்செய்திக்கு சான்று பகர்ந்து வாழக்கூடிய வாழ்வையும் ஆண்டவரிடம் கேட்போம்.

**********